[பேரவைத் தலைவர்] [1992 மார்ச் 12

தலைப்பு மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இப்பத்திரிகை ஆசிரியரே ஒப்புக் கொண்டுள்ள நிலையில் அதற்காக வருத்தமோ மன்னிப்போ கோராது, அப்பத்திரிகையின் செய்தித் துறை இனிமேல் இவ்வாறு நிகழாது பார்த்துக் கொள்ளுமாறு கோரப் பட்டுள்ளதென விளக்கம் அளித்துள்ளது பேரவையின் உரிமையைக் குறைத்து மதிப்பிட்டதாகவே கருதுகிறேன்.

எனவே, உரிமைப் பிரச்சினையின் முக்கியப் பகுதிக்குப் பதில் அளிக்காததும், ஏற்பட்ட தவறுக்கு வருத்தமோ மன்னிப்போ கோராமல் இருப்பதும், பேரவைத் தலைவர் அவர்களையே கேள்வி கேட்பது போல் பதில் அளித்திருப்பதுமான காரணங்களாலும், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இதில் உரிமை மீறல் இருப்பதாகக் கருதுவதாலும், பேரவை விதி 226-ன் கீழ் விசாரித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக இப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

3. அறிக்கை அளித்தல்.

மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. கா.ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 5-வது அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. வரவு - செலவுத் திட்டம், 1992–93—பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992–93 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம். இன்றைய தினம் உறுப்பினர்கள் பேசுவதற்கான கடைசி நாளாகும். நாளைய தினம் கட்சித் தலைவர்கள். அதையடுத்து எதிர்க் கட்சித் தலைவர், அதன் பின் நிதியமைச்சர் பதிலுரை என்பதற்காக ஒதுக்கப்பட்ட நாளாகும். எனவே இன்றைக்கு ஏறத்தாழ 20 உறுப்பினர்கள் பேசி முடிக்க வேண்டியுள்ளது. அதையும் கவனத்தில்கொண்டு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடத்திற்கு எந்த வகையிலேயும் மேற்செல்லாமல் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். **திரு. வி. தண்டாயுதபாணி.**